03.08.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### முழுக் கொள்ளளவை எட்டுகிறது கிருஷ்ணகிரி அணை

கிருஷ்ணகிரி அணை விரைவில் முழுக் கொள்ளளவான 52 அடியை எட்டுகிறது.

தென்பெண்ணை ஆற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளான கர்நாடக மாநிலம், பெங்களூரு மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது.

இதையடுத்து கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள கெலவரப்பள்ளி அணை மற்றும் கிருஷ்ணகிரி அணைக்கு நீர்வரத்து படிப்படியாக அதிகரித்தது.

இதனால் அணையின் நீர்மட்டமும் உயர்ந்தது. இந்த நிலையில், திங்கள்கிழமை கிருஷ்ணகிரி அணையின் நீர்மட்டம் 50 அடியை எட்டிய நிலையில், விநாடிக்கு நீர்வரத்தான 1,059 கன அடி நீர் தென்பெண்னை ஆற்றில் வெளியேற்றப்பட்டது. இந்த நிலையில் செவ்வாய்க்கிழமை மாலை 5 மணி அளவில் அணையின் நீர்வரத்து விநாடிக்கு 678 கன அடியாகக் குறைந்தது. மேலும், வெளியேற்றப்படும் நீரின் அளவு 112 கன அடியாகக் குறைக்கப்பட்டது. இதனால் அணையின் நீர்மட்டம் 50.50 அடியாக உயர்ந்தது. விரைவில் அணை முழுக் கொள்ளளவான 52 அடியை எட்டும் என பொதுப்பணித் துறையினர் தெரிவித்தனர்.

## தில்லியில் காய்கறிகளின் விலை 35-40% உயர்வு

வரத்து குறைவால், தில்லி மற்றும் தேசிய தலைநகர் வலயப் பகுதிகளில் (என்சிஆர்) காய்கறிகளின் விலை 35 முதல் 40 சதவீதம் வரை அதிகரித்துள்ளது.

இதுதொடர்பாக வர்த்தக அமைப்பான "அசோசேம்' செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: நாட்டின் பல்வேறு பகுதிகளில் பெய்து வரும் பலத்த மழை காரணமாக, தில்லி மற்றும் என்சிஆருக்கு காய்கறிகளின் வரத்து குறைந்துள்ளது. இதனால் கடந்த ஒரு மாதமாக காய்கறிகளின் விலை அதிகரித்து வருகிறது.

தில்லியின் மொத்தச் சந்தையான ஆஸாத் மண்டியில் வெண்டைக்காய், முட்டைகோஸ், பீன்ஸ், கத்தரிக்காய், பாகற்காய் உள்ளிட்ட காய்களின் விலை 35 முதல் 40 சதவீதம் வரை அதிகரித்துள்ளது. ஒரு கிலோ வெண்டைக்காய் ரூ.20-25 என்று விற்பனையாகி வந்த நிலையில் தற்போது ஒரு கிலோ ரூ.35-40 வரை விலை உயர்ந்துள்ளது. சில்லறை விற்பனை கடைகளில் ஒரு கிலோ வெண்டைக்காய் ரூ.50க்கு விற்கப்படுகிறது.

இதேபோல, பீன்ஸ் விலை இரு மடங்கு உயர்ந்து ஒரு கிலோ 55க்கு விற்கப்படுகிறது. ஒரு கிலோ கேரட் விலையும் ரூ.50 ஆக உயர்ந்துள்ளது. இதுபோன்ற நிலையை தடுக்க காய்கறிகளை சேமித்து வைப்பதற்கான உள்கட்டமைப்புகளை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விவசாயிகளுக்கு நுண்ணுயிர் பாசன பராமரிப்பு பயிற்சி

சிவகங்கை மாவட்டம் எஸ்.புதூர் ஒன்றியம் மேலவண்ணாரிருப்பு கிராமத்தில் விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ் நுண்ணுயிர் பாசன பராமரிப்பு முறை குறித்து உள்மாவட்ட அளவிலான பயிற்சி நடைபெற்றது. பயிற்சிக்கு, எஸ்.புதூர் வேளாண்மை உதவி இயக்குநர் சர்மிளா தலைமை வகித்தார். குன்றக்குடி வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் விமலேந்திரன் நுண்ணுயிர் பாசன முறை பற்றிய பயன்கள், பராமரிப்பு முறைகள் குறித்து செயல் விளக்கம் அளித்தார். மேலும் கோடை உழவின் நன்மைகள், நுண்ணுயிர் உரங்கள் பயன்கள் பற்றியும் எலி ஒழிப்பு முறைகள் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினார். பயிற்சியில் வட்டார

தொழில்நுட்ப மேலாளர் அமிர்தலெட்சுமி, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் இளங்கோ, அழகுசுந்தரம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**மண் வளம் காக்க பசுந்தாள் உரமிட வேண்டும்: வேளாண் அதிகாரி அறிவுரை**

மண்ணின் வளத்தை பாதுகாக்கவும், மகசூலை அதிகரிக்கவும் பசுந்தாள் உரத்தை பயன்படுக்க வேண்டும் என்று விழுப்புரம் வேளாண் துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

விழுப்புரம் அருகே உள்ள திருவாமாத்தூர் கிராமத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், வேளாண் துறை மூலம் 40 ஏக்கர் அளவில் பசுந்தாள் உரம் (தக்கை பூண்டு) சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இப்பயிர்களை, விழுப்புரம் வேளாண்மை உதவி இயக்குநர் கென்னடி ஜெபக்குமார் திங்கள்கிழமை நேரில் பார்வையிட்டார். அப்போது, அவர் விவசாயிகளிடம் கூறியது:

விவசாயிகள் ரசாயன உரங்கள் அதிகம் பயன்படுத்துவதால் மண்ணின் கார, அமில தன்மைகள் மாறுகின்றன. மேலும், நிலத்தில் உப்பின் அளவு அதிகரிக்கிறது. தொடர்ந்து சாகுபடி செய்தல் மற்றும் ரசாயன உரங்களை பயன்படுத்துவதால் மண்ணின் தன்மை மாறி அங்ககசத்துகள் குறைந்து மண் வளமற்றதாகிவிடுகிறது. ஆகையால், மண் வளத்தினை அதிகரித்திட விவசாயிகள் சம்பா சாகுபடிக்கு நாற்றங்கால் விடும் முன்னர், தக்கைப்பூண்டு பயிரிடலாம். இதற்காக ஏக்கருக்கு 20 முதல் 25 கிலோ விதைகளை விதைக்கலாம். தக்கைப்பூண்டு களிமண் பகுதிக்கு ஏற்றது. மணல் பகுதிகளுக்கு சணப்பை ஏற்றது. 30 முதல் 35 நாள்களில் பூக்கும் தருணத்தில், இதனை மடக்கி உழுதால் ஏக்கருக்கு சுமார் 20-25 டன்கள் வரை தழைகள் கிடைக்கிறது.

ஆண்டுக்கு ஒருமுறை பசுந்தாள் உரம் சாகுபடி செய்தால் மண்ணின் வளம் கூடி மகசூல் அதிகரிக்கிறது. ரசாயன உரங்களின் செலவு குறைகிறது என்றார். அரசு பசுந்தாள் உரப்பயிர்களை ஊக்குவித்திட, விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ.1,500 மானியம் வழங்குகிறது. விவசாயிகள் பெருமளவு இத்திட்டத்தில் பயன்பெற வேண்டும் என்றார்.

வேளாண் அலுவலர்கள் செந்தில், கங்காகௌரி மற்றும் முன்னோடி விவசாயிகள் கலந்துகொண்டனர்.

## இன்றையவேளாண்செய்திகள்

### தமிழர்களின் வேளாண்மை விஞ்ஞானம்

'நண்டு ஊர நெல்லு, நரி ஓட கரும்பு, வண்டி ஓட வாழை, தேர் ஓடத் தென்னை' என ஒரு நாட்டுப்புற வழக்கு ஆடிக்காலத்தில், நடவு முறையில் விவசாயிகளுக்கு வழி காட்டுகிறது. நெல்நாற்று நட்டால் நெற்பயிர்களுக்கு இடையில் நண்டு ஊர்ந்து செல்ல வேண்டும். கரும்பு நட்டால் இரண்டு கரும்புகளுக்கு இடையில் நரி ஓடும் அளவிற்கு இடைவெளி விட வேண்டும். வண்டி ஓடுகின்ற இடைவெளி வாழைக்கு விட்டால் தான் பக்ககன்றுகளுக்கு இடம் கிடைக்கும். தென்னை மரக்கினை நடும் போது இரண்டு தென்னைகளுக்கு இடையில் தேர் ஓடும் அளவிற்கு இடைவெளி விட வேண்டும்.

### சந்தோஷம் பொங்க வைக்கும் சம்பங்கி விவசாயம்



கரும்பு, நெல், வாழை அல்லது காய்கறிகள் பயிரிட்டு தான் சம்பாதிக்க வேண்டும் என்பதில்லை. சம்பங்கிப்பூ சாகுபடியில் சத்தமின்றி சாதிக்கலாம் என்கிறார்,

திண்டுக்கல் தவசிமடையைச் சேர்ந்த விவசாயி வாசுகி. பட்டம் படித்த இவர், விவசாய ஆர்வத்தால் இயற்கை சாகுபடியில் இறங்கினார். பூக்கள் பயிரிட ஆசை கொண்டு 'சம்பங்கி' பூவை தேர்வு செய்தார். ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக சம்பங்கி பூவையே தொடர்ந்து பயிரிட்டு லாபம் பார்த்து வருகிறார்.

**சாகுபடி எப்படி:** ஜெயங்கொண்டானில் இருந்து ரூ.150 க்கு ஒரு கிலோ சம்பங்கி கன்று வாங்கினார். அறுபது சென்ட் இடத்தில் 3 அடி இடைவெளியில் படுக்கை அமைத்து (மண்ணை குவித்து) 2 அடி இடை வெளியில் 3 ஆயிரம் செடிகளை நடவு செய்தார். மூன்று நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சுகிறார். இப்படி செய்தால் நடவு செய்து 3 மாதத்தில் பூப்பூக்க துவங்கிவிடும். துவக்கத்தில் நான்கு அல்லது ஐந்து கிலோ வரை மகசூல் கிடைக்கும். ஆறு மாதங்களில் தினமும் 20 கிலோ மகசூல் கிடைக்கும். உரமாக ஜீவாமிர்தம் (சாணம், கோமியம், நாட்டு சர்க்கரை, பயறு, சாணிமாவு, தண்ணீர் கலந்தது) கரைசலை தண்ணீருடன் சேர்த்து 15 நாட்களுக்கு ஒரு முறை பாய்ச்சுகிறார். மற்ற பயிர் வகைகள், பூக்களை போன்று சம்பங்கியில் எவ்வித பூச்சி தாக்குதலும் இருக்காது. பராமரிப்பிற்கு என்று தனியே வேலையாட்கள் தேவையில்லை. ஒரு நபர் மட்டுமே போதும்.

**சந்தோஷ வாழ்க்கை:** சாகுபடி குறித்து வாசுகி கூறியதாவது: சம்பங்கி ஒரு கிலோ ரூ. 80 வரை விலை போகும். விசேஷ நாட்களில் ரூ.1000 கூட போகும். தினமும் 20 கிலோ வரை மகசூல் கிடைத்தால் பராமரிப்பு, மற்றும் இதர செலவுகள் போக தினமும் ரூ.1000 கிடைக்கும். மாதம் ரூ.30 ஆயிரம் எனில் ஆண்டுக்கு ரூ.4 லட்சம் வரை லாபம் கிடைக்கும். குறைந்தபட்சம் 25 முதல் 60 சென்ட் வரை சாகுபடி செய்ய ரூ.60 ஆயிரம் செலவு செய்தாலும் நல்ல லாபம் கிடைக்கும். சம்பங்கியில் ஊடுபயிராக வெங்காயம், கொத்தமல்லி, பயறு, முள்ளங்கியும் பயிரிடலாம். அதன் மூலமும் தனியே வருமானம் கிடைக்கும். குறைவான செலவில் நிறைவான வாழ்க்கை சம்பங்கியால் கிடைக்கும் என்றார். தொடர்புக்கு 95009 - 32613.- **ஆ.நல்லசிவன், திண்டுக்கல்.**

## தினமும் பணம் கொழிக்கும் அரளிப்பூ சாகுபடி



உழுதவன் கணக்கு பார்த்தால் உழக்கு கூட மிஞ்சாது' என்ற பழமொழி விவசாயிகளின் புலம்பலாக ஒலித்துக் கொண்டே தான் இருக்கிறது. விவசாயத்தில் நஷ்டம் என்பதே இதற்கு காரணம். திட்டமிட்டு விவசாயம் செய்தால் குறைந்த இடத்தில் லாபம் கொழிக்கும் தொழிலாக மாற்றலாம். இதை மெய்ப்பிக்கும் வண்ணம் தேனி மாவட்டம் பள்ளப்பட்டியில் மத்திய அரசு உர நிறுவனத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற சையது முகமது, உழைப்பில் சாதனை படைத்து வருகிறார்.

இயற்கை விவசாயம் மீதுள்ள ஆர்வத்தால் சுபாஷ் பாலேக்கர், வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் மையங்களில் இவரும், மனைவியும் பயிற்சி பெற்றனர். அதன் பலனாக 50 சென்ட் இடத்தில் அரளி சாகுபடி செய்ய முடிவு செய்தார். இதற்காக சேலத்தில் இருந்து வீரிய ரக அரளி நாற்றுக்களை வாங்கி வந்தார். மாட்டு சாணம், கோமியம், கருப்பட்டி கலந்து 200 லிட்டர் நீரில் பஞ்சகாவியம் தயாரித்தனர். செடி, கொடிகளை பறித்து பஞ்சகாவியத்தில் நனைத்து நடவு இடத்தில் குழிதோண்டி புதைத்தனர்.

செடி, கொடிகள் மக்கிய நிலையில் ஒரு அரளி செடிக்கும் அடுத்த செடிக்கும் இரண்டரை அடி அகல இடைவெளியும், 12 அடி நீளத்தில் வரிசை நடவு முறையில் நட்டார். ஐந்தாவது மாதத்தில் பூ பூத்தது. அதன் பின் தினமும் மகசூலாக அரளி பூ எடுத்து மார்க்கெட்டிற்கு அனுப்புகிறார்.

நாள் ஒன்றுக்கு 25 முதல் 40 கிலோ வரை கிடைக்கிறது. பனிக்காலங்களில் ஒரு கிலோ பூ ரூ.300 வரை விலை போனது. தொடர்ந்து 20 ஆண்டுகள் வரை பூ எடுக்கலாம். பூ பறித்து 30 நிமிடம் நீரில் வைக்க வேண்டும். அதில் உள்ள பால் வெளியேறிய பின் 'பேக்கிங்' செய்தால் ஒரு வாரம் வரை மொட்டுகளாக இருக்கும். மார்க்கெட்டிற்கு கொண்டு சென்று பேக்கிங் திறந்தால் அரைமணி நேரத்தில் மலர்ந்து விடும்.

'பாலிஹவுசில்' வெள்ளரி தோட்டத்தின் மற்றொரு பகுதியில் 30 சென்டில் இஸ்ரேல் தொழில் நுட்பத்தில் 'பாலிஹவுஸ்' முறையில் யு.எஸ்., ரக வெள்ளரி சாகுபடி செய்துள்ளார். தோட்டம் முழுவதும் வெள்ளரி காய்த்து தொங்குகிறது. 100 நாட்கள் ஒருநாள் விட்டு ஒருநாள் தினமும் 500 கிலோ வெள்ளரி பறித்து ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டிற்கு அனுப்புகிறார். அரளி, வெள்ளரி தினமும் சாகுபடியாகி வருமானம் கிடைக்கிறது.

சையது முகமது கூறுகையில், "அரளி நடவு செய்து 20 ஆண்டு வரை மகசூல் பெறலாம். 2 மாதத்திற்கு ஒரு உரம், ஒன்றரை ஆண்டுக்கு ஒருமுறை கவாத்து செய்தால் தொடர்ந்து மகசூல் கிடைக்கும். நாற்று, நடவு என ரூ.20 ஆயிரம் செலவு ஆனது. தற்போது பூ மார்க்கெட் நல்ல விலை கிடைப்பதால் ஆண்டுக்கு ரூ.3 லட்சம் வருமானம் கிடைக்கிறது. பூ பறிக்க தினமும் 6பேர் தேவை. தோட்டக்கலை துறையில் ரூ.4.50 லட்சம் மானியம் உட்பட ரூ.11 லட்சம் செலவில் 'பாலிஹவுஸ்' அமைத்து வெள்ளரி சாகுபடி செய்துள்ளேன். அதில் ஒருநாள் விட்டு ஒருநாள் 400 முதல் 500 கிலோ எடுக்கிறோம்.

தற்போது கிலோ ரூ.15க்கும், கோடையில் கிலோ ரூ.100 வரை விலைபோனது. ஒரு சாகுபடியில் 20 டன் வரை மகசூல் பெறலாம். இதன்பின் மல்லிகை சாகுபடி

செய்ய உள்ளேன்," என்றார். தொடர்புக்கு 81486 21443.
**- பி.ரவி, தேனி.**

## மாடி தோட்ட மகசூல் 'பார்முலா'



'வீடுகள் தோறும் மாடி தோட்டம்' என்பது பரலாகி வருகிறது. தமிழ்நாடு தோட்டக்கலைத்துறை சார்பில் மாடி தோட்டம் அமைக்க ரூ.500 விலையில் தேங்காய் நார் தூசி கலந்த பாக்கெட்கள், விதைகள், இயற்கை உரங்கள், விளக்கக் கையேடுகள் என அனைத்தையும் வழங்குகின்றனர். இவற்றை ஆர்வத்தோடு வாங்கி செல்லும் பலர் ஆசை... ஆசையாய்... மாடி தோட்டம் அமைக்கின்றனர். தினமும் செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்சுகின்றனர். சில நாட்களில் செடிகள் நன்கு வளர்ந்து பசுமையாக காட்சியளிக்கிறது. அழகாக பூக்கள் பூக்கின்றன. பூவுக்குள் இருந்து பிஞ்சுக்காய் எட்டிப்பார்க்கிறது. அதை பார்த்த ஆனந்தத்தில் மனைவி, குழந்தைகளை வரவழைத்து, "நான் வளர்க்கும் மாடி தோட்டத்தில் பூக்களும், காய்களும் பூத்து குலுங்குவதை பாருங்கள்," என அங்கலாய்த்து கொள்வார்.

'பஞ்சு பூச்சி' நோய்: 'சிவ பூஜையில் கரடி புகுந்தது' போல் பச்சை பசேலென காட்சிஅளிக்கும் செடிகளின் மீது வெண்பட்டு விரித்தது போல் 'பஞ்சு பூச்சிகள்' அப்பி கொள்ளும். இலையின் பச்சையத்தை உறிஞ்சி வாழும். இதனால் இலைகள் சுருண்டு வளர்ச்சியடையாது. வேப்பம் எண்ணெய் மருந்து தெளித்தாலும் பூச்சிகள் அழியாது. பூச்சி தாக்கிய செடியை வேருடன் அழித்தால் மட்டுமே ஒழிக்க முடியும்.

இதனால் வெறுக்குப்போகும் மாடி தோட்ட விரும்பிகள் பலர் ஒரு கட்டத்தில் மாடி தோட்ட எண்ணத்தை கை விடுவதுண்டு.

பூச்சிகளுக்கு 'குட்பை': 'மாடி தோட்டம் கோடி வருமானம்' என்பதை மெய்ப்பிக்கும் வகையில் பூச்சிகளுக்கு 'குட்பை' சொல்லி, மகசூலுக்கு 'வெல்கம்' சொல்கின்றனர் மூன்று பொறியாளர் நண்பர்கள். மதுரையை சேர்ந்த பாரதி, கண்ணன், விவேக் ஆகியோர் பொறியியல் பட்டம் பெற்றவர்கள். தாங்கள் சார்ந்த துறையில் 'பிசி'யாக உள்ளனர். எனினும் ஓய்வு நேரங்களில் விவசாய பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் 'பாலி ஹவுஸ்' முறையில் மாடி தோட்டம் அமைத்து பூச்சிகளுக்கு நிரந்தர விடை கொடுத்துள்ளனர். இரட்டிப்பு மகசூல் பெற்று வருகின்றனர்.

நண்பர்கள் கூறியதாவது: வீட்டின் மாடியில் இட வசதிக்கு ஏற்ப பாலி ஹவுஸ் அமைக்க வேண்டும். இதில் செடிகளுக்கு தேவையான 18-20 வெப்ப நிலை கிடைக்கிறது. வீட்டிற்குள் செல்வது போல் பாலி ஹவுஸில் நுழைவு பாதை 'ஜிப்' வைத்து அமைக்க வேண்டும்.

ஜிப்பை திறந்து உள்ளே சென்றதும் மூடி விட வேண்டும். மூன்று அடுக்கு 'பெட்' அமைத்து பாலிதீன் பாக்கெட்டுகளில் தென்னை நார் துாசி நிரப்பி விதைக்க வேண்டும்.

பாலி ஹவுஸ் மேல் புறத்தில் குழாய் அமைத்து செயற்கை மழை பெய்வது போல் காலையில் 5.30, 7.00 மற்றும் 9.30 மணி என மூன்று முறை சுழற்சி முறையில் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். இதற்காக 'ஆட்டோமேட்டிக் பம்பிங் ஸ்டேஷன் சிஸ்டம்' அமைக்க வேண்டும்.

இம்முறையில் நீர் பாய்ச்ச தினமும் ஓரிரு லிட்டர் தண்ணீர் போதுமானது. எனினும் சிறிய பூ வாளி மூலமும் தண்ணீர் பாய்ச்சலாம். செடி முருங்கை, நாட்டு கத்தரி, சைனா கத்தரி, முள்ளங்கி, பீட்ரூட், காலிபிளவர், பச்சை மிளகாய், கறிவேப்பிலை, கொத்தமல்லி என வீட்டு சமையலுக்கு தேவையான அனைத்து வகை காய்கறிகளையும் பாலி ஹவுஸ் முறையில் மாடி தோட்டம் அமைத்து சாதிக்கலாம், என்றனர்.

பாலி ஹவுஸ் உள்ளே பூச்சிகள் வராது என்பதால் பூச்சி தாக்குதல் என்ற பேச்சுக்கே இடமில்லை. பூச்சி கொல்லி மருந்துக்கும் வேலை இல்லை. இயற்கை உரத்திற்கு வேம்பம் புண்ணாக்கு போதும். வீட்டின் தினமும் வீணாகும் காய்கறி கழிவுகளை

பாலி ஹவுஸ் வெளியில் சேகரித்து இயற்கை உரம் தயாரிக்கலாம். பாலி ஹவுஸ் பற்றி 'nature a2z. com' தெரிந்து கொள்ளலாம். **தொடர்புக்கு 99431 80596.**

## 'விவசாயிகள் துயர் துடைக்க ரூ.5,780 கோடி கடன் தள்ளுபடி'

ஈரோடு: "விவசாயிகளின் துயர் துடைக்க, 5,780 கோடி ரூபாய் கடனை முதல்வர் தள்ளுபடி செய்துள்ளார்," என, மின்துறை அமைச்சர் தங்கமணி பேசினார்.

தீரன் சின்னமலை நினைவு விழா, ஓடாநிலையில் நேற்று நடந்தது. இதில் மின் துறை அமைச்சர் தங்கமணி பேசியதாவது: தமிழக முதல்வருக்கு விவசாயிகள் மீது எப்போதும் அதிக அக்கறை உண்டு. விவசாயிகள் நிறைந்த பகுதியாக கருதப்படும் கொங்கு மண்டலத்துக்கு தேவையான அனைத்து திட்டங்களையும் அவர் நிறைவேற்றி வருகிறார். தமிழகத்தில் உள்ள விவசாயிகளின் துயர் துடைக்க, கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகள் பெற்ற, 5,780 கோடி ரூபாயை முதல்வர் தள்ளுபடி செய்ததுடன், அதை கூட்டுறவு துறைக்கு செலுத்த உள்ளார். காலிங்கராயனில் கான்கிரீட் தளம் அமைத்துக் கொடுத்துள்ளார். இப்பகுதியின் வளர்ச்சிக்கு திட்டங்களையும், நலத்திட்ட உதவிகளையும் வழங்கி உள்ளார். இவ்வாறு அவர் பேசினார். விழாவில், தீரன் சின்னமலை வாரிசுதாரர்கள் கவுரவிக்கப்பட்டனர்.

## தேயிலை தோட்டங்களுக்கு உரம் கோத்தகிரி சிறு விவசாயிகள் ஆர்வம்

கோத்தகிரி: கோத்தகிரி பகுதி விவசாயிகள் தேயிலை தோட்டங்களில் உரமிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கோத்தகிரி பகுதியில், அதிகப்பரப்பளவில் தேயிலை சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இங்கு பெரும்பாலான விவசாயிகள் தேயிலை தொழிலை நம்பியே உள்ளனர். கடந்த சில மாதங்களாக பசுந்தேயிலைக்கு கட்டுப்படியான விலை இல்லை.

இடுப்பொருட்களின் விலை உயர்வு, தொழிலாளர் பற்றாக்குறை பிரச்னை போன்றவற்றால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். தங்களது தோட்டங்களை பராமரிக்க முடியாத அளவுக்கு பொருளாதார நெருக்கடியில், விவசாயிகள்

சிக்கியுள்ளனர். இந்நிலையில், கடந்த சில நாட்களாக, கோத்தகிரி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் பரவலாக மழைப் பெய்து
வருகிறது.

இந்த மழையால், காய்ந்துக் கிடந்த தோட்டங்கள் ஓரளவு ஈரம் கண்டுள்ளதால், உரமிடுவதற்கு ஏதுவான சூழல் நிலவுகிறது.

இதனால், பொருளாதார நெருக்கடியிலும், கடன் பெற்று தங்களது தோட்டங்களுக்கு உரமிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன், 'அம்மோனியம் பேஸ் மற்றும் யூரியா' உள்ளிட்ட உரங்களுக்கு, 50 முதல், 100 ரூபாய் வரை விலை குறைந்துள்ளதால், விவசாயிகள் ஓரளவு ஆறுதல் அடைந்துள்ளனர். மழைப் பெய்துவரும் நிலையில், உரமிட்ட தோட்டங்களில், பசுந்தேயிலை துளிர்விட்டு மகசூல் அதிகரிக்க வாய்ப்புள்ளதால், விவசாயிகள் தோட்டப்பராமரிப்பு பணியில் தீவிரம் காட்டியுள்ளனர்.

சிறு விவசாயிகள் கூறுகையில், 'தேயிலை வாரியம் மூலமாக, சிறு விவசாய சங்க குழுக்களுக்கு, 15 ஆயிரம் ரூபாய் உரமானியம் வழங்குவது ஆறுதல் தருவதாக உள்ளது.

எனினும், மாநில அரசு, கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம், உரம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், மழைக்காலங்களில் தட்டுப்பாடு இல்லாமல் உரம் வழங்கினால் அலைச்சல் இருக்காது' என்றனர்.

## உயர்ந்தது நேந்திரன் விலை: விவசாயிகள் மகிழ்ச்சி

கூடலூர்: நேந்திர வாழைக்கு, மூன்று ஆண்டுகளுக்கு பின், விலை ஏறியதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கூடலூர், பந்தலூர் பகுதிகளில், நீண்ட கால பயன் தரும் தேயிலை, காபி, குறுமிளகு, பாக்கு, ஏலம், கிராம்பு போன்ற பயிர்களை தவிர, குறுகிய காலத்தில் பயன் தரும் நெல், நேந்திர வாழை, இஞ்சி போன்ற பயிர்கள் விளைவிக்கப்படுகின்றன.

கடந்த சில ஆண்டுகளாக, நேந்திர வாழைக்கு எதிர்பார்த்த விலை கிடைக்காததால், சிலர் வேறு விவசாயத்துக்கு மாறி விட்டனர். எனினும், பெரும்பாலான

விவசாயிகள் நேந்திர வாழை பயிரிட்டிருந்தனர். இந்நிலையில், இந்த ஆண்டு, நேந்திர வாழையின் விலை ஏறு முகத்தில் உள்ளது. கடந்த இரு நாட்களாக கிலோவுக்கு, 57 ரூபாய் குறையாமல் விலை கிடைத்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கேரளா மக்களின் ஓணம் பண்டிகையின் போது, நேந்திர வாழையின் விலை மேலும் உயர வாய்ப்புள்ளது.

விவசாயிகள் சோமன் கூறுகையில்,“இங்கு உற்பத்தியாகும் வாழை, சிப்ஸ் மற்றும் குழந்தைகளுக்கான பவுடர் உணவுக்கு பயன்படுகிறது.

எனினும், கடந்த மூன்று ஆண்டுகளாக நேந்திர வாழைக்கு எதிர்பார்த்த விலை கிடைக்கவில்லை.

மூன்று ஆண்டுகளுக்கு பின், இந்த ஆண்டு தான், கிலோவுக்கு 50 ரூபாய் கிடைந்துள்ளது. இதனால், இந்த ஆண்டு, அதிகளவில் நேந்திரன் பயிரிட்டு வருகிறோம்,” என்றார்.

**பசுந்தாள் உர விதைகள் மானியத்தில் வழங்கல்**

ராசிபுரம்: 'பசுந்தாள் உர விதைகளை மானிய விலையில் பெற வேளாண் விரிவாக்க மையத்தை அணுகலாம்' என, நாமகிரிப்பேட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் அசோகன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிக்கை: நாமகிரிப்பேட்டை வட்டாரத்தில், 2016 - 17ம் ஆண்டில், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ், மண் வளத்தினை மேம்படுத்தும் பொருட்டு, நெல் வயல்களில் நடவுக்கு முன் பசுந்தாள் உர விதைகளை விதைக்க வேண்டும். இந்த முறையில் நெல் பயிரிட்டால், நெல்லுக்கு தழைச்சத்து கிடைப்பதோடு நோய் எதிர்ப்புத்திறனும் அதிகரிக்கும். மானிய விலையில் விதை தேவைப்படும் விவசாயிகள், நாமகிரிப்பேட்டை வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள முன்னுரிமை பதிவேட்டில் விவசாயிகளின் சிட்டா, ரேஷன் கார்டு நகல்களுடன் வந்து பதிவு செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## பயறு வகைகளில் லாபம் பெறும் முறை - விதைச்சான்று உதவி இயக்குனர் தகவல்

சிவகங்கை: பயறு வகைப் பயிர்களில் லாபம் பெறும் முறை குறித்து விதைச்சான்று உதவி இயக்குனர் லட்சுமி பிரபா தகவல் தெரிவித்துள்ளார்.
அதன் விபரம்: இம்மாவட்டத்தில் ஆடிப்

பட்டத்திற்கு ஏற்ற வம்பன் 5 மற்றும் 6 ரக உளுந்து பயிர்கள் 60 முதல் 65 நாட்கள் வளரக்கூடியவை.

இவற்றின் விதைபண்ணை அமைக்க, ஆதாரநிலை மற்றும் சான்றுநிலை விதைகளை அந்தந்த வேளாண்மை விரிவாக்க மையங்களிலும், உரிமம் பெற்ற விதைபண்ணை நிலையங்களிலும் பெறலாம். விதை வாங்கியதற்கான ரசீது மற்றும் சான்று அட்டைகளை பத்திரமாக வைத்திருக்க வேண்டும்.

விதைத்த 35 வது நாளில் விதைப்பண்ணையை அந்தந்த பகுதி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் மூலம் பதிவு செய்ய வேண்டும். பதிவு கட்டணம் ஏக்கருக்கு ரூ.25, வயல் ஆய்வுக்கட்டணம் ரூ.50, பகுப்பாய்வு கட்டணம் ரூ.30 மொத்தம் ரூ.105 செலுத்த வேண்டும்.

இப்பண்ணைகளில் ஒரு ஏக்கருக்கு 8 கிலோ விதைகளை விதை நேர்த்தி செய்து, ஒரு கிலோவுக்கு 4 கிராம் வீதம் டிரைக்கோடெர்மா விரிடி அல்லது 2 கிராம் கார்பன்டாசிம் என்ற அளவில் பூஞ்சான விதை நேர்த்தி செய்ய வேண்டும். 24 மணி நேரம் கழித்து ஒரு ஏக்கருக்கு தேவையான 3 பாக்கெட் ரைசோபியம் பயறு மற்றும் 2 பாக்கெட் பாஸ்போ பாக்டீரியா நுண்ணுயிரியை ஆறிய வடி கஞ்சியுடன் கலந்து விதையுடன் சேர்த்து அரைமணி நேரம் நிழலில் உலர்த்தி விதைக்க வேண்டும்.
அவ்வாறு செய்தால் விதை மூலம் பரவும் பூஞ்சான நோய்களை கட்டுப்படுத்த முடியும். மேலும், உயிர் உர நேர்த்தியால் காற்றில் உள்ள தழைச்சத்து பயிருக்கு கிடைத்த விதை பயிர் வளர்ச்சி நன்கு ஏற்படுகிறது. பயிர் பூக்கும் தருணத்தில் 2 சதவீதம் டி.ஏ.பி., கரைசலை மாலையில் தெளிக்க வேண்டும். இதனால் பூக்கள் அதிகமாகி, அதிக காய்கள் பிடித்து மகசூல் அதிகரிக்கும்.

இப்படி பராமரிக்கப்படும் விதைப்பண்ணையில் ஏக்கருக்கு 300 கிலோ வரை மகசூல் கிடைக்கும், விவசாயிகளுக்கு மானியமும் கிடைத்து லாபம் இரட்டிப்பாக வாய்ப்புஉள்ளது.

## இன்றைய வேளாண் செய்திகள்

### கே.ஈச்சம்பாடி அணை நிரம்பியது : உழவு பணிகள் தீவிரம்

அரூர்: அரூர் அருகே கே.ஈச்சம்பாடி அணை நிரம்பியதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். உழவு பணிகளை தீவிரப்படுத்தியுள்ளனர். தர்மபுரி மாவட்டம் கம்பைநல்லூர் அருகே உள்ள கே.ஈச்சம்பாடியில் தென்பெண்ணையாற்றின் குறுக்கே அணை கடடப்பட்டுள்ளது. கடந்த இரண்டு வாரங்களாக பெய்த மழை காரணமாக அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரித்தது.

இந்நிலையில், நேற்று முன்தினம் அணை நிரம்பியது. அங்கிருந்து உபரிநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது இதனால், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். மேலும், உழவு பணிகளை தீவிரப்படுத்தியுள்ளனர். இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது: தற்போது அணை நிரம்பியுள்ளதால் ஆடிப்பட்டத்தில் விவசாயிகள் நெல் நடவு செய்யும் பணியில் தீவிரமாக ஈடுபடுவார்கள்.

நாளை(இன்று) ஆடிப்பெருக்கு விழா கொண்டாடப்பட உள்ள நிலையில், ஆற்றில் தண்ணீர் வருவதால் மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். மேலும், அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட்டால் உழவு பணிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

### ஆடிப்பெருக்கை முன்னிட்டு நிலங்களில் விதைப்பு பணி தீவிரம் விவசாயிகள் மகிழ்ச்சி

தேவாரம், : ஆடிப்பெருக்கை முன்னிட்டு தேவாரம் பகுதி நிலங்களில் விவசாயிகள் விதைப்புப் பணிகளில் ஈடுபட்டனர்.ஆடி மாதம் பிறந்துவிட்டால் இல்லங்களில் குடும்ப உறவுகளை அழைத்து விருந்து படைக்கும் நிகழ்ச்சிகள் களைகட்டுவது வழக்கம். தேவாரம், கோம்பை, பல்லவராயன்பட்டி, லட்சுமிநாயக்கன்பட்டி, டி.மீனாட்சிபுரம், அழகர்நாயக்கன்பட்டி, தம்மிநாயக்கன்பட்டி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களிலும் ஆடி முதல் நாளில் புதுமணதம்பதியரை அழைத்து கறிவிருந்து

படைப்பர். ஆடிப்பெருக்கான நேற்று தாலி பெருக்கிக் கட்டும் வைபவங்கள் நடந்தன. இதையடுத்து இங்குள்ள கிராமக் கோயில்களில் காலை முதலே புதுமணத்தம்பதியர் உள்பட மக்கள் கூட்டம் அலைமோதியது. தொடர்ந்து மலையடிவாரத்தை ஒட்டியுள்ள மானாவாரி நிலங்களில் விதைப்புப் பணி தொடங்கியது. நிலக்கடலை, மக்காச்சோளம் போன்றவைகளை விவசாயிகள் விதைத்து தங்களது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டனர்.

## தோட்டக்கலை பயிர் மானிய திட்டத்தில் சேர வேண்டுமா? விண்ணப்ப முகாமில் பெயரை பதிவு செய்ய அழைப்பு

இளையான்குடி, : தோட்டக்கலை பயிர்மானிய திட்டத்தில் சேர்ந்து பயன்பெற, நாளை மறுநாள் இளையான்குடி வட்டார தோட்டக்கலைத்துறை அலுவலகத்தில் நடைபெறும், விண்ணப்ப முகாமில் பெயரை பதிவு செய்ய, விவசாயிகளுக்கு இளையான்குடி தோட்டக்கலைத்துறை அழைப்பு விடுத்துள்ளது. இளையான்குடி வட்டார விவசாயிகளுக்கு, தோட்டக்கலை பயிர் சாகுபடியை ஊக்குவிக்கும் நோக்கத்தில் பல மானிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில் 2016-17ம் ஆண்டிற்காண தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டம், மானாவாரி பயிர் மேம்பாட்டுத் திட்டம், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் மற்றும் பிரதான் மந்திரி நீர்பாசன திட்டம் ஆகியவை தோட்டக்கலைத்துறை சார்பில் செயல்படுத்தப்படுகிறது.இவற்றில் தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் கீழ் காய்கறி நாற்றுகள் (கத்தரி, மிளகாய்) மா, பப்பாளி நாற்றுகள், நிலப்போர்வை, பறவை தடுப்பு வேலிகள், தேனி பெட்டிகள் மற்றும் பண்ணை இயந்திரங்களும் வழங்கப்பட உள்ளன.

மானாவாரி பயிர் மேம்பாடு திட்டத்தின்கீழ் மா (பக்க ஒட்டு) நாற்றுகளும், மற்றும் பிரதான் மந்திரி நீர்பாசன திட்டத்தின் கீழ் சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்துடனும், மற்ற விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்துடனும் தோட்டக்கலை பயிர்களுக்கு சொட்டுநீர் பாசனம் அமைத்து தரப்படுகிறது. மேலும் தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டத்தின் கீழ் விளக்குப்பொறி, இனகவர்சிப் பொறியும் மற்றும் மஞ்சள் நிற பொறிகளும், கை தெளிப்பான் ஆகியவை மானியத்துடன் வழங்கப்பட உள்ளது. மேற்கண்ட திட்டங்களில் ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கு தனி இட ஒதுக்கீடும், சலுகையும் வழங்கப்பட்டுள்ளது. தோட்டக்கலை பயிர்களுக்கு மானியத்துடன் சலுகைகளைப் பெற ஆர்வமுள்ள

இளையான்குடி வட்டார விவசாயிகள் தங்களது நில உடைமை ஆவணம், ரேஷன்கார்டு நகல், ஆதார் கார்டு நகல், வங்கி பாஸ்புக் நகல், வாக்காளர் அடையாள அட்டை நகல், மற்றும் 2 பாஸ்போர்ட் சைஸ் போட்டோவுடன் இளையான்குடி வட்டார தோட்டக்கலைத்துறை அலுவலகத்தில் நாளை மறுநாள் (ஆக.5) நடைபெறும் விண்ணப்ப முகாமில் விவசாயிகள் தங்களது பெயரை முன்பதிவு செய்யலாம் என இளையான்குடி தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர்(பொ) கண்ணன் தெரிவித்துள்ளார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

## விளைச்சல்–வரத்து அதிகரிப்பு: கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறிகள், பழங்கள் விலை சரிவு



சென்னை,

விளைச்சல் மற்றும் வரத்து அதிகரித்ததின் காரணமாக கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறிகள் மற்றும் பழங்களின் விலை சரிந்தது உள்ளது.

<u>காய்கறிகள் விலை சரிவு</u>

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் கடந்த ஓரிரு மாதங்களாக காய்கறிகள் விலை அதிகரித்து வந்தது. விளைச்சல் அதிகரித்ததால் காய்கறிகள் விலை குறைய தொடங்கியது. ஒரு சில காய்கறிகளை தவிர மற்ற எல்லா காய்கறிகள் விலையும் ஓரளவு குறைந்து விட்டது. மேலும் ஆடி மாதம் என்பதால் வியாபாரம் மந்தநிலையில் இருப்பதாக வியாபாரிகள் கருத்து தெரிவித்து உள்ளனர்.

இதுகுறித்து சென்னை கோயம்பேடு காய்கறி சங்கத்தின் பொதுச்செயலாளர் அப்துல் காதர் கூறியதாவது:–

<u>விற்பனை மந்தம்</u>

சென்னை கோயம்பேடு சந்தைக்கு கேரளா, கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட அண்டை மாநிலங்களில் இருந்தும், ஒட்டன்சத்திரம், பழனி, சேலம் உள்ளிட்ட பிற பகுதிகளில் இருந்தும் காய்கறிகள் வந்து கொண்டிருக்கிறது. இந்தநிலையில் விளைச்சல்–வரத்து அதிகரித்ததின் காரணமாக காய்கறிகள் இறக்குமதி கூடுதலாக நடந்து வருகிறது.

இதனால் தினமும் 250 முதல் 300 லாரிகள் மூலம் காய்கறிகள் இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. கடந்த 3 மாதங்களாகவே விளைச்சல்–வரத்து அதிகரித்து தான் இருந்தது. ஆனாலும் வெயிலின் தாக்கம், சுபமுகூர்த்த நாட்கள் உள்ளிட்ட காரணங்களால் காய்கறிகள் விலை அதிகரித்தது. ஆனால் இது ஆடி மாதம் என்பதால் முகூர்த்த நாட்கள் இல்லை. இதனால் காய்கறிகள் விற்பனை மந்தமாகவே உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

<u>விலை நிலவரம்</u>

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் விற்பனை செய்யப்பட்ட காய்கறிகளின் விலை நிலவரம் (ஒரு கிலோ) வருமாறு:–

பல்லாரி– ரூ.15 முதல் ரூ.18 வரை, உருளைக்கிழங்கு– ரூ.25, கேரட்– ரூ.35, பீன்ஸ்– ரூ.20, நூக்கல்– ரூ.20, சவ்சவ்– ரூ.25, பீட்ரூட்– ரூ.15 முதல் ரூ.18 வரை, முட்டைக்கோஸ்– ரூ.25, மிளகாய்– ரூ.60, இஞ்சி– ரூ.50 முதல் ரூ.60 வரை, சேனைக்கிழங்கு– ரூ.32, சேப்பங்கிழங்கு– ரூ.28, கத்திரிக்காய்– ரூ.20 முதல் ரூ.40 வரை, வெண்டைக்காய்– ரூ.15 முதல் ரூ.20 வரை, அவரைக்காய்– ரூ.40, கோவைக்காய்– ரூ.25 முதல் ரூ.30 வரை, கொத்தவரங்காய்– ரூ.28, பாகற்காய்(பன்னீர்)– ரூ.40, பெரிய பாகற்காய்– ரூ.25, முருங்கைக்காய்– ரூ.40 முதல் ரூ.50 வரை, முள்ளங்கி– ரூ.15 முதல் ரூ.20 வரை, வெள்ளரிக்காய்– ரூ.20, புடலங்காய்– ரூ.25 முதல் ரூ.30 வரை, தக்காளி– ரூ.15, காலிபிளவர்(ஒன்று)– ரூ.15 முதல் ரூ.30 வரை, பீர்க்கங்காய்– ரூ.25 முதல் ரூ.30 வரை, சுரைக்காய்– ரூ.20, சாம்பார் வெங்காயம்– ரூ.30, தேங்காய்– ரூ.15, வாழைக்காய்– ரூ.4.

இவ்வாறு அவர் கூறினார்.

<u>பழங்கள்</u>

பழங்களின் விலை நிலவரம் குறித்து கோயம்பேடு மார்க்கெட் அங்காடி நிர்வாகக்குழு உறுப்பினர் பழக்கடை கே.ஜெயராமன் கூறியதாவது:–

விளைச்சல்–வரத்து பாதிக்காத போதிலும் ஆடி மாதம் என்பதால் பழங்களின் விலை சரிந்து வருகிறது. சீசன் முடியும் தருவாயில் உள்ளதால் மாம்பழம், பலாப்பழம் விலை வெகுவாக உயர்ந்து உள்ளது. இதனால் ரூ.50 வரை விற்பனையான மாம்பழம், தற்போது ரூ.70 வரை விற்பனை செய்யப்படுகிறது. ரூ.40 வரை விற்பனையான பலாப்பழம் ரூ.70 வரை விற்பனையாகிறது.

சிம்லா ஆப்பிள் (இந்தியா) சீசன் ஆரம்பித்துவிட்டது. தற்போது சிம்லா ஆப்பிள் ரூ.150 முதல் ரூ.160 வரை விற்பனை ஆகிறது. போகப்போக விலை குறைய வாய்ப்பு உள்ளது. வரத்து அதிகம் என்பதாலும், வியாபாரம் மந்தம் என்பதாலும் சாத்துக்குடி உள்பட பழங்களின் விலை வெகுவாகவே சரிந்து விட்டன. எல்லா பழங்களின் விலையிலும் ரூ.10 வரை சரிவு ஏற்பட்டு உள்ளது.

<u>சிம்லா ஆப்பிள்</u>

பழங்களின் விலை நிலவரம் (கிலோவில்) வருமாறு:–

வாஷிங்டன் ஆப்பிள்– ரூ.200, சீனா ஆப்பிள்– ரூ.180 முதல் ரூ.200 வரை, சிம்லா ஆப்பிள் (இந்தியா) – ரூ.150 முதல் ரூ.160 வரை, மாதுளை– ரூ.120 முதல் ரூ.130 வரை, சாத்துக்குடி– ரூ.20 முதல் ரூ.25 வரை, ஆரஞ்சு– ரூ.50 முதல் ரூ.60 வரை, சப்போட்டா– ரூ.40, அன்னாசிபழம் (ஒன்று)– ரூ.60 முதல் ரூ.70 வரை, கொய்யா– ரூ.40, வாழை (தார்)– ரூ.250 முதல் ரூ.400 வரை, தர்பீஸ்– ரூ.10 முதல் ரூ.15 வரை, திராட்சை– ரூ.60 முதல் ரூ.70 வரை, சீதாப்பழம்– ரூ.20. இவ்வாறு அவர் கூறினார்.

## தஞ்சையில் இருந்து தேனிக்கு 1,200 டன் புழுங்கல் அரிசி சரக்கு ரெயிலில் அனுப்பி வைக்கப்பட்டது



தஞ்சாவூர்,

தஞ்சையில் இருந்து தேனிக்கு 1,200 டன் புழுங்கல்அரிசி மூட்டைகள் சரக்கு ரெயிலில் அனுப்பி வைக்கப்பட்டன.

<u>நெல் கொள்முதல்</u>

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக விளங்கும் காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி நடைபெறும். இது தவிர

கோடை நெல் சாகுபடியும் நடைபெறுவது வழக்கம். இவ்வாறு சாகுபடி செய்யும் நெல் அறுவடை செய்யப்பட்டு, தமிழகஅரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு கொள்முதல் செய்யப்படும் நெல், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு அரவைக்காக ரெயில் மற்றும் லாரிகள் மூலம் அனுப்பி வைக்கப்படும். மேலும் தஞ்சை மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் அரிசி ஆலைகளுக்கும் அரவைக்காக அனுப்பி வைக்கப்படுவது வழக்கம்.

<u>1,200 டன் புழுங்கல்அரிசி</u>

அவ்வாறு அரவைக்கு அனுப்பி வைக்கப்பட்ட நெல் பின்னர் பல்வேறு மாவட்டங்களுக்கு பொது வினியோகத்திட்டத்தின் கீழ் வினியோகம் செய்ய அரிசி மூட்டைகளாக அனுப்பி வைக்கப்படுகிறது. அதன்படி தஞ்சை மாவட்டத்தில் மேலவஸ்தாசாவடி, பிள்ளையார்பட்டி, நாஞ்சிக்கோட்டை ஆகிய பகுதிகளில் உள்ள சேமிப்பு கிடங்குகளில் இருந்து லாரிகளில் புழுங்கல்அரிசி மூட்டைகள் ஏற்றப்பட்டு தஞ்சை ரெயில் நிலையத்திற்கு நேற்று கொண்டு வரப்பட்டன. பின்னர் இந்த அரிசி மூட்டைகள் சரக்குரெயிலில் ஏற்றப்பட்டன. மொத்தம் 21 வேகன்களில் 1,200 டன் புழுங்கல்அரிசி ஏற்றப்பட்டது. இதையடுத்து இந்த சரக்குரெயில் தஞ்சையில் இருந்து தேனிக்கு புறப்பட்டு சென்றது.